**பெண் :** பூப்பூக்கும் ஓசை
அதைக் கேட்கத்தான் ஆசை
புல்விரியும் ஓசை அதைக்
கேட்கத்தான் ஆசை

**பெண் :** பூப்பூக்கும் ஓசை
அதைக் கேட்கத்தான் ஆசை
புல்விரியும் ஓசை அதைக்
கேட்கத்தான் ஆசை பட்சிகளின்
கூக்கூக்கூ பூச்சிகளின் ரிங் ரிங்
ரிங் சங்கீதம் சொல்லித்தருமே
தங்கப்பெண்ணே காலோடு சலங்கை
பூட்டி கரையெல்லாம் வீணை மீட்டி
நதிபாடும் பாடல் கேளாய் பட்டுப்
பெண்ணே பூமி ஒரு வீணை அதைக்
காற்றின் கைகள் மீட்டுதே கேட்கும்
ஒலியெல்லாம் அட சாரிகமபதனிசாரி

**பெண் :** பூப்பூக்கும் ஓசை
அதைக் கேட்கத்தான் ஆசை
புல்விரியும் ஓசை அதைக்
கேட்கத்தான் ஆசை

**பெண் :** கண்தூங்கும் நேரத்தில்
மௌனத்தின் ஜாமத்தில் கடிகாரச்
சத்தம் சங்கீதம் கண்கானா தூரத்தில்
சுதிசேரும் தாளத்தில் ரயில் போகும்
ஓசை சங்கீதம் பசிகொண்ட நேரம்
தாளிக்கும் ஓசை சந்தோஷ சங்கீதம்
தாலாட்டும் அன்னைக்கெல்லாம்
தங்கள் பிள்ளை மார்பை முட்டி
பாலுண்ணும் சத்தம் சங்கீதம்

**ஆண் :** ஹில்கோரே
ஹில்கோரே ஹில்கோரே
ஹில்கோரே மங்கலாரே
மங்கலாரே தூரி தூரி

பைய்யா ஹில்கோரே
ஹில்கோரே ஹில்கோரே
ஹில்கோரே ஜங்கலாரே
ஜங்கலாரே தூமீராதே தைய்யா

**பெண் :** பூப்பூக்கும் ஓசை
அதைக் கேட்கத்தான் ஆசை
புல்விரியும் ஓசை அதைக்
கேட்கத்தான் ஆசை

**பெண் :** சிட்சிட்டுக் குருவிகளும்
சில்லென்று நீராடி சிறகுலர்த்தும்
ஓசை சங்கீதம் கரைகொண்ட
பாறைமேல் கடல் கொண்ட
அலைவந்து கைதட்டும் ஓசை
சங்கீதம் காற்றோடு தென்னை
அசைகின்ற ஓசை சிருங்கார
சங்கீதம் முத்தாடும் நீரின் மேலே
தத்தித் தத்தித் தாவிச் செல்லும்
தவளைகள் ஓசை சங்கீதம்

**ஆண் :** ஹில்கோரே
ஹில்கோரே ஹில்கோரே
ஹில்கோரே மங்கலாரே
மங்கலாரே துாரி துாரி
பைய்யா ஹில்கோரே
ஹில்கோரே ஹில்கோரே
ஹில்கோரே ஜங்கலாரே
ஜங்கலாரே தூமீராதே தைய்யா

**பெண் :** பூப்பூக்கும் ஓசை
அதைக் கேட்கத்தான் ஆசை
புல்விரியும் ஓசை அதைக்
கேட்கத்தான் ஆசை பட்சிகளின்
கூக்கூக்கூ பூச்சிகளின் ரிங் ரிங்
ரிங் சங்கீதம் சொல்லித்தருமே
தங்கப்பெண்ணே காலோடு சலங்கை
பூட்டி கரையெல்லாம் வீணை மீட்டி

நதிபாடும் பாடல் கேளாய் பட்டுப்
பெண்ணே பூமி ஒரு வீணை அதைக்
காற்றின் கைகள் மீட்டுதே கேட்கும்
ஒலியெல்லாம் அட சரிகமபதனிசரி